# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137/2025

| Deposition of Witness for | Prosecution PW17<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Dr. Narasimman |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 2nd day of February, 2026.

**(Accused is in Judicial custody)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.25 மணி

நான் தற்போது திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் போதகராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 25-01-2025 அன்று பணியில் இருந்தபோது ஊத்துக்கோட்டை மகளிர் காவல் நிலைய குற்ற எண் 1/2025 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ராஜா, வயது 28

என்பவரை ஆண்மை தன்மை பரிசோதனை செய்ய வேண்டி கடிதம் பெறப்பட்டது. காவலர் 1220 திரு. சுந்தரம் மற்றும் காவலர் 1950 திரு. தினேஷ் ஆகியோர் அழைத்து வந்தனர். நான் மேற்படி ராஜா என்பவரை பரிசோத செய்தததில் அவர் ஆண்மை தன்மை அற்றவர் என்று கூறுவதற்கு எந்த ஒரு முகாந்திரமும் இல்லை என்று சான்று வழங்கினேன். எதிரிக்கு நான் வழங்கிய மருத்துவ அறிக்கை **அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என்னிடம் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துவரப்பட்ட நபர் சிறையிலிருந்து அழைத்துவரப்பட்டாரா என்று அதுகுறித்து வேண்டுகோள் கடிதத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. நான் வழங்கிய சான்றிதழில் அதுகுறித்து எதுவும் குறிப்பிடவில்லை. பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்ட நபரின் வயது 28 என்றால் சரிதான். அவருடைய பெயர், விலாசம் எனக்கு போலீசார் சொல்லி தெரியும் என்றால் சரிதான். என்னுடைய மருத்துவ சான்றிதழில் மேற்படி நபரிடம் Deformities இருந்ததா என்றால் இல்லை. எலும்புமுறிவு இருந்ததா என்றால் கை, கால்களில் எதுவும் காணப்பட்டவில்லை. மேற்படி நபரை நான் பரிசோதனை செய்தபோது 2ஆம் நிலை பாலியல் உறுப்பு வளர்ச்சியின் அடிப்படையிலும் நரம்பியல் குறைபாடு இல்லைஎன்ற அடிப்படையிலும், பாலியல் நோய் எதுவுமில்லை என்ற அடிப்படையிலும் அவர் ஆண்மை தன்மை அற்றவர் என்பதற்கு முகாந்திரம் இல்லை என்று சான்று வழங்கினேன் என்றால் சரிதான். மேற்படி நபரின் பிறப்புறுப்பில் அவருக்கு காயங்கள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிறப்புறுப்பை தவிர மேற்படி நபரின் உடலில் வெளிப்படையாக காயங்கள், நகக்கீறல்கள் இருந்ததா என்றால் இல்லை. அவருடைய ஆண்மைதன்மை உறுதி செய்வதற்கு நான் மேற்சொன்ன 3 காரணிகள் மட்டும் போதுமானதா என்றால் போதுமானது. நான் குறிப்பாக அவருடைய பிறப்புறுப்பின் Circumference, Elongation பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் குறிப்பிட்ட ஆண்மை தன்மை உள்ளவர் என்ற சான்று

எந்த குறிப்பிட்ட காலஇடைவெளிக்கு உட்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஆண்மை தன்மை இழப்பு என்பது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிகழும் என்றால் சரிதான். சர்க்கரை நோயாளிகளுக்கும் அளவிற்கு அதிகமாம மது அருந்தும் பழக்கும் உள்ளவர்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு ஆண்மை தன்மை இழப்பு ஏற்படும் என்றால் அதற்கான வாய்ப்புகள் உண்டு. இந்த வழக்கின் வரலாறுபடி சம்பவம் 06-01-2025 ல் நடந்தும் எதிரியை உடனடியாக என்னிடம் ஆண்மை தன்மை பரிசோதனைக்காக அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். 25-01-2025 அன்று தான் எதிரி என்னிடம் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 137/2025**

| Deposition of Witness for | Prosecution PW18<br>Defence<br>Court |
|---|---|

Name : Tmt. Smriti Banerjee

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 2nd day of February, 2026.

**(Accused is in Judicial custody)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 11.20 மணி

நான் தற்போது தடய அறிவியல் துறையில் DNA பிரிவில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 09-01-2025 அன்று நான் பணியில் இருந்தபோது திருவள்ளூர் அரசு மருத்துவமனை கல்லூரி மகப்பேரியியல் மருத்துவர்

வினோதினி அவர்களிடமிருந்து அனைத்து மகளிர் ஊத்துக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 1/2025, பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்து சேகரிக்கப்பட்ட பொருட்களை ஒரு சீலிட்ட கவரில் என்னிடம் கொடுத்தார்.

1) நுண்நோக்கி Slide, அதில் வெள்ளை நிற லேபியல் Smear

2) சோதனைக்குழாயில் லேபியல் ஸ்வாப்

3) நுண்நோக்கி Slide, Vaginal Smear

4) சோதனைக்குழாயில் Vaginal Swab

மாதிரிகளில் விந்து மற்றும் விந்தணு உள்ளனவா என்று கண்டறிய சோதனை செய்யப்பட்டது. மேற்படி மாதிரிகளை 20-01-2025 முதல் 23-01-2025 வரை பரிசோதனை செய்யப்பட்டது. ஆய்வு முடிவில் மேற்படி 1 மற்றும் 3 மாதிரிகளில் விந்தணுக்கள் காணப்பட்டவில்லை. மேற்படி 2 மற்றும் 4 மாதிரிகளில் விந்து காணப்பட்டவில்லை. மேற்படி என்னுடைய ஆய்வறிக்கையினை Biol 36/2025 dated 23-01-2025 ஐ சமர்பித்தேன். மேற்படி Biol No. 36/2025 dated 23-01-2025 ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18-02-2025 அன்று திருவள்ளூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்துடன் திருமதி. சரண்யா, காவலர் 2629 அவர்கள் மூலமாக

Item 1 – பழுப்பு நிற கறைகளுடன் கூடிய கிழிந்த புளூ நிற சேலை,

Item 2 – கிழிந்துபோன பழுப்பு நிற கறைகளுடன் கூடிய உள்பாவாடை ஒன்று

Item 3 – பழுப்பு நிற கறையுடன் கூடிய லைட் பிரவுன் நிற பிளவுஸ்

Item 4 – பழுப்பு நிற கறையுடன் கூடிய வெள்ளை நிற டிரவுசர்ஸ்

Item 5 – புளூ நிற சார்ட்ஸ்

Item 6 – பழுப்பு நிற கறையுடன் கூடிய பிங்க நிற டி-சர்ட்

மாதிரிகளில் இரத்தம் மற்றும் விந்து உள்ளனவா என்று கண்டறிய பரிசோதனை செய்தேன். மேற்படி மாதிரிகளை 24-02-2025 முதல் 25-02-2025 வரை பரிசோதனை செய்தேன். பரிசோதனையில் மாதிரிகள் 1 முதல் 4 மற்றும் 6 இரத்தம் இருந்தது கண்டறியப்பட்டது. மாதிரி 5ல் இரத்தம் கண்டறியப்படவில்லை. மேற்படி 1 முதல் 6 வரையிலான மாதிரிகளில் விந்து

கண்டறியப்படவில்லை. ஆய்வு முடிவுகளை Biol 174/2025, dated 25-02-2025 சமர்பித்தேன். மேற்படி Biol No. 174/2025, dated 25-02-2025 ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பரிசோதனைசெய்தபிறகு மீதமுள்ள மாதிரிகளை காவலர் WPC 2671 சிவரஞ்சினி மூலமாக 25-03-2025 அன்று நீதிமன்றதிற்கு அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

Biol 36/2025 ல் அயிட்டம் 1 முதல் 4 வரையிலான மாதிரிகளை டாக்டர் வினோதினி அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். டாக்டர் வினோதினி யிடமிருந்து மருத்துவ குறிப்புகள் ஏதேனும் மாதிரிகள் குறித்து நான் பெற்றேனா என்றால் AR copy ஐ பார்த்தேன். Medical Form மற்றும் AR copy பெற்று அதை பார்வையிட்டேன். 09-01-2025 அன்று பெறப்பட்ட மாதிரிகளை 25-01-2025 அன்று பரிசோதனைக்கு உட்படுத்த குறிப்பிட்ட காரணம் ஏதேனும் உண்டா ஏன் காலதாமதம் ஆனது என்றால் மாதிரிகள் எனக்கு 21-01-2025 பரிசோதனை செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. மற்ற மாதிரிகளுக்கு ஏதாவது கேள்வி கேட்டு ஆனுப்பினேனா என்றால் டாக்டர் கோரியபடி நான்கு மாதிரிகளை பரிசீலனை செய்தேன். மாதிரிகளில் அயிட்டம் 1 முதல் 4 வரையிலான பொருட்களில் இரத்தம் கண்டறியப்பட்டதா என்றால் நான் மேற்படி மாதிரிகளில் விந்து மற்றும் விந்தணு உள்ளனா என்று தான் பரிசீலனை செய்தேன். மேற்படி மாதிரிகளில் இரத்தம் உள்ளதா என கண்டறியுமாறு வேண்டுகோள் கடிதத்தில் கோரப்படவில்லை. ஆகவே நான் இரத்தம் இருந்ததா என்று பரிசோதனை செய்யவில்லை. உயிரியில் அறிக்கையில் அயிட்டம் 1 முதல் 4 மாதிரதிகளில் விந்து மற்றும் விந்தணுக்கள் காணப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். Biol 174/2025 மாதிரிகளில் அயிட்டம் 1 முதல் 6 பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது என்றால் இரத்தம் உள்ளனவா என கண்டறிய அனுப்பப்பட்டது. இரத்த வகை கண்டறிவதற்காக வேண்டுகோள் கடிதம் பெற்றேனா என்றால் அது குருதிவடிநீரியியல் பிரிவை சேர்ந்தது. மேற்படி மாதிரிகளை பரிசோதனை செய்த பிறகு குருதிவடிநீரியியல் பிரிவுக்கு இரத்தம்

வகை கண்டறிவதற்காக அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எனது Biol 174/2025 ஆய்வறிக்கையில் அயிட்டம் 1, 2, 3, 4, 6 ஆகியவைகளில் இரத்தம் கண்டறியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மாதிரிகளில் இரத்தம் மனித இரத்தமா அல்லது மிருக ரத்தமா என குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது குருதிவடிநீரியியல் பிரிவை சார்ந்தது. மாதிரி அயிட்டம் எண் 3 லைட் பிரவுன் கலர் பிளவுஸ் என்றால் சரிதான். நான் Sandal கலர் பிளவுஸ் ஏதோனும் பரிசோதிக்க பெற்றேனா என்றால் காவல் துறைமூலமாக அனுப்பப்பட்ட கடிதத்தில் அது பிரவுன் கலர் என்று அனுப்பப்பட்டது. ஆனால் அதை பார்க்கும்போது அது லைட் பிரவுன் கலர் ஆகும். ஆகவே அதை லைட் பிரவுன் என்று குறிப்பிட்டுள்ளனே. மாதிரிகளில் அயிட்டம் எண் 6 பிங்கா அல்லது ரோஸ் கலரா என்றால் அது பிங்க் கலர் ஆகும். அயிட்டம் 1 முதல் 6 வரையிலான மாதிரிகளில் விந்து காணப்பட்டவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.